### பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில்

# புதர்கள் அகற்றம்; மின்விளக்குகள் சீரமைப்பு





புதர்மண்டி கிடந்த ரயில் நிலைய வளாகம். அடுத்தபடம்: செடி, கொடிகள் அகற்றப்பட்டுள்ளது.

**தினகரன் செய்தி எதிரொலி**

ஆலந்தூர், ஜூலை 28: தினகரன் செய்தி எதிரொலியாக பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் புதர்கள் அகற்றப்பட்டன. மின்விளக்குகள் சீரமைக்கப்பட்டது.

பரங்கிமலையில் இருந்து ஆலந்தூர் வழியாக கோயம்பேடு வரை மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இதன் மூலம் ஆதம்பாக்கம், மடிப்பாக்கம், பழவந்தாங்கல், பரங்கிமலை மற்றும் சுற்றுப்பகுதி மக்கள் பல்வேறு இடங்களுக்கு பயணித்து வருகின்றனர். தினசரி நூற்றுக்கணக்கான பயணிகள் வந்து செல்லும் இந்த பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

குறிப்பாக, ரயில் நிலையத்தில் இருந்து ரயில்வே சுரங்கப்பாலம் வரை பயணிகள் நடந்து செல்லும் பாதையில் மின்விளக்குகள் பழுதடைந்து காணப்பட்டதால், மாலை 6 மணிக்கு மேல் இருள் சூழ்ந்து பயணிகள் அச்சத்துடன் செல்லும் நிலை இருந்தது.

மேலும், ரயில் நிலைய வளாகம் புதர் மண்டி காணப்படுவதால், சமூக விரோதிகள் கூடாரமாக மாறியது. போதை ஆசாமிகள் நடமாட்டத்தால், பயணிகள் தனியாக செல்வதற்கு பயந்து, 4 அல்லது 5 பேராக சேர்ந்து ரயில் நிலையத்திற்கு செல்லும் நிலை ஏற்பட்டது.

இதுகுறித்த செய்தி 'தினகரன்' நாளிதழில் கடந்த 23ம் தேதி வெளியிடப்பட்டது. இதன் எதிரொலியாக மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள், ரயில் நிலைய வளாகத்தில் இருந்த புதர்களை பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றி உள்ளனர். மேலும், ரயில்வே சுரங்கப்பாதைக்கு செல்லும் வழியில் பழுதடைந்த மின் விளக்குகள் சீரமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பயணிகள் கூறுகையில், 'பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் பெண் பயணிகள் பாதுகாப்பு கருதி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட வேண்டும், சிசிடிவி கேமரா பொருத்த வேண்டும்,' என்றனர்.